

குன்றத்தூர் மத்திய ஒன்றியம், சிக்கராயபுரம் ஊராட்சியில் பாகம் எண் 175 ல் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை ஆற்றினார். இதில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளரும் மாவட்ட குழு ஊராட்சி தலைவருமான படப்பை ஆ.மனோகரன், மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஏ.மணி, ஒன்றிய கழகம் பொறுப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, பொதுமக்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் சுமதி வைத்தீஸ்வரன் நன்றி கூறினார்.

### ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. தலைமையில்! ஆர்.கே.நகரில் கிறிஸ்துமஸ் விழா!

# 2200 நபர்களுக்கு நல உதவிகள்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

### அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - ஆவடி சா.மு.நாசர் மற்றும் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. - எஸ்.ஜோயல் பங்கேற்பு!

சென்னை, டிச.22

ஆர் கே நகர் சட்டமன்ற தொகுதியில் கிறிஸ்மஸ் விழா கடந்த நான்கு ஆண்டுகளாக சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு ஆர்.கே.நகரில் கிறிஸ்துமஸ் விழா 2025 என்னும் தலைப்பில் ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியை சார்ந்த 2200 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல் விழா இன்று (22.12.2025 திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில் தங்கம் மாளிகை டி.எச். ரோடு. சென்னை81ல் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம். எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

விழாவில் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இவ்விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு 2200 நபர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்துரைக்கின்றார்கள்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள் பி.கே.சேகர்பாபு, ஆவடி சா.மு.நாசர், மாவட்டச் செயலாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., எஸ்.ஜோயல், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., டாக்டர் சுபேர்கான், Rt. Rev. பால் பிரான்சிஸ், ரவிச்சந்திரன்,

Bishop. கதிரொளி, மாணிக்கம், டி.ஜெயசிங், நேதாஜி யு.கணேசன், அப்துல்ரஹ்மான், தேவிகதிரேசன், சி.சுவாமிதாஸ், REV: ஜெயக்குமார், பி.சாம்ஆலிவர், எம்.ரோசர், தம்பிராஜ், ஜோசப்ஜேக்கப், பேராயர் எஸ்.டேவிட், லிவிங்ஸ்டன், சாமுவேல், டி.ஏசுதாஸ், வசந்தபாபு, தயபாட்ரா உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப் பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களாக டி.கே.ரத்னகுமார், ஜெ.ஜெ.நெல்சன், வி. அருள், அப்துல்ரஹ்மான், டி.ஜஸ்டின், ஆர்.ஆபிரகாம், கே.ஞானராஜ், மோகன், ஜெ.ஜான்வில்ப்ரட், ஆர். பவுல், ராதாகிருஷ்ணன்,

சி.பிச்சைமுத்து, எஸ். ஐசக், இம்மானுவேல், ஜோஷ்வா, டி.டேவிட், அஜித், ஆரோன், கே.சம்பத், ஆர். பால்ராஜ். ஜெ.இம்மானுவேல், பீட்டர், எஸ்.ரகு ஆகியோர் செயல்படுகின்றனர்.

39 வட்டசெயலாளர் என்.எம்.கதிரேசன் நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே. ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. செய்துள்ளார்.




